**சுருக்கம்**

மாநகராட்சிகள் – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் வேலூர் மாநகராட்சிகளுக்கு வார்டு குழுக்கள் அமைத்தல் –ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண்.140** **நாள்: 15.9.2011.**

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (நிலை) எண். 265, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்: 15.10.1996.
2. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.25120/ 2011/ எம்.3, நாள் 8.9.2011.
3. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித எண்.3/ கூடுதல் இயக்குநர் (ச) /2011, நாள் 06.09.2011.
4. திருப்பூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித எண்.இ8/ 8538/2011, நாள் 07.09.2011.
5. வேலூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் கடித ந.க.எண்.3/ கூடுதல் இயக்குநர் (ச)/2011, நாள் 07.09.2011.

----

**ஆணை:**

நகராட்சி நிர்வாக ஆணையர், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 100 கோட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், 100 கோட்டங்களுக்கு 5 வார்டு குழுக்கள் அமைக்க கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களின் கருத்துக்கள் கோரப்பட்டதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றம் 6 வார்டு குழுக்கள் அமைக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் துடியலூர், சரவணம்பட்டி, வெள்ளக்கிணர், வடவள்ளி, வீரகேரளம் ஆகிய பேரூராட்சிகளின் மன்றங்கள் 5 முதல் 8 வார்டு குழுக்கள் அமைக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், இதர உள்ளாட்சி அமைப்புகள் கருத்தேதும் தெரிவிக்கவில்லை என்றும், மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்களை நிராகரித்து கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 5 வார்டு குழுக்களை அமைக்கலாம் எனவும், இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–Aன்கீழ் ஆணைகளை வெளியிடுமாறு கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

2. மேலும், விரிவாக்கம் செய்யப்பட்ட திருப்பூர் மாநகராட்சிக்கு 60 கோட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் தொடர்ச்சியாக திருப்பூர் மாநகராட்சியின் 60 கோட்டங்களுக்கு 4 வார்டு குழுக்கள் அமைக்க திருப்பூர் மாநகராட்சியின் மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சிகளின் மன்றங்கள் ஒப்புதல் அளித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும், இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–A மற்றும் திருப்பூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 8–ன்கீழ் திருப்பூர் மாநகராட்சிக்கு 4 வார்டு குழுக்களை அமைத்து ஆணைகளை வெளியிடுமாறு திருப்பூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. மேலும், விரிவாக்கம் செய்யப்பட்ட வேலூர் மாநகராட்சிக்கு 60 கோட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் தொடர்ச்சியாக வேலூர் மாநகராட்சியின் 60 கோட்டங்களுக்கு 4 வார்டு குழுக்கள் அமைக்க வேலூர் மாநகராட்சி மன்றம் மற்றும் இணைக்கப்படும் உள்ளாட்சி மன்றங்களின் கருத்துக்கள் கோரப்பட்டதாகவும், வேலூர் மற்றும் இணைக்கப்படும் 15 உள்ளாட்சி மன்றங்கள் இதனை ஏற்றுக் கொண்டதாகவும், அரியூர் ஊராட்சி மன்றம் தனது தீர்மானத்தில், சேண்பாக்கத்தில் வார்டுகுழு அமைக்கப்பட்டால், வார்டுக்குழு அலுவலகம் சென்றுவர மிகவும் சிரமமாக இருக்கும் என்பதால், மூன்றாவது வார்டுக்குழுவில் சேர்க்க தீர்மானித்துள்ளதாகவும், சித்தேரி ஊராட்சி மன்றம் தனது தீர்மானத்தில், சேண்பாக்கம் வார்டுக் குழு மிகவும் தொலைவாக உள்ளதால், பொதுமக்கள் மிகவும் அவதிப்படுவார்கள் என்பதால், அருகாமையில் உள்ள உள்ளாட்சி மன்ற இடத்தை வார்டுக் குழுவுக்கு தேர்வு செய்ய தீர்மானித்துள்ளதாக வேலூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்பு பணி அலுவலர் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாக, நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

4. மேலும், அரியூர் ஊராட்சி விரிவாக்கப்பட்ட வேலூர் மாநகராட்சியின் தென்கோடி கடைசியில் உள்ளதாலும், அடிப்படை வசதிகளுடன் கூடிய வார்டுக்குழு அலுவலகம் அருகில் அமையப்பெறாததாலும், இயற்கை எல்லையைத் தாண்டி 3வது வார்டுக் குழுவில் இணைக்க சாத்தியக் கூறு இல்லாததாலும் இந்தத் தீர்மானத்தை நிராகரிக்கலாம் என்றும் , சித்தேரி ஊராட்சியானது அரியூர் வருவாய் கிராமத்திற்கு உட்பட்டு இருப்பதாலும், விரிவாக்கப்பட்ட வேலூார் மாநகராட்சியின் தென்கோடியில் அமைவதாலும் அடிப்படைவசதிகளுடன் கூடிய வார்டு குழு அலுவலகம் அருகில் அமையப்பெறாததாலும் இந்த தீர்மானத்தை நிராகரிக்கலாம் என்றும் வேலூர் மாநகராட்சி சிறப்பு பணி அலுவலர் தெரிவித்துள்ளதாக, நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதனடிப்படையில், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 5–A மற்றும் வேலூர் மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 8ன்படி வேலூர் மாநகராட்சிக்கு 4 வார்டு குழுக்களை அமைத்து ஆணைகளை வெளியிடுமாறு வேலூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலர் தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

5. கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, திருப்பூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, வேலூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளின் மீது, உரிய ஆணை பிறப்பிக்க பரிந்துரைப்பதாக நகராட்சி நிர்வாக ஆணையர் தமது கடிதத்தில் தெரிவித்து, மேற்குறிப்பிடப்பட்ட சிறப்புப் பணி அலுவலர்களின் அறிக்கையை இணைத்தனுப்பியுள்ளார்.

6. அரசு, கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, திருப்பூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை, வேலூர் மாநகராட்சி எல்லை மறுசீரமைப்பு சிறப்புப்பணி அலுவலரின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளையும் அவற்றின் மீதான நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையையும் கவனமாகப் பரிசீலித்து, அதனை ஏற்றுக்கொண்டு, அதனடிப்படையில், இவ்வாணையின் பின்னிணைப்பில் கண்டுள்ளவாறு, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் வேலூர் மாநகராட்சியின் வார்டு குழுக்களை அமைத்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

7. இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கை (Appended Notification) 15.9.2011 –ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்படும்.

8. மேற்படி ஆணைகளின் அடிப்படையிலான உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தொடர்புடைய மாநகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நா.ச. பழனியப்பன்**
**அரசு முதன்மைச் செயலாளர்(பொ)**

பெறுநர்:
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 600 079. (இவ்வாணையின் பின்னிணைப்பில் உள்ள அறிவிக்கையை *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடவும், அதன் 50 நகல்களை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
மாவட்ட ஆட்சியர்கள், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் வேலூர் மாவட்டம்.
ஆணையர்கள், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் வேலூர் மாநகராட்சி.

நகல்:
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.6/மாந.2/அ.ந.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## APPENDIX.

## NOTIFICATION- I.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) and in supersession of the Municipal Administration and Water Supply Department Notification No.II(2)/MW/2096(I-3)/96, published at pages 2 to 3 of Part II–Section 2 of the Tamil Nadu Government Gazette Extra-ordinary, dated the 15th October 1996, the Governor of Tamil Nadu hereby constitutes five wards committees for the Corporation of Coimbatore and each of the said wards committee specified in column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof :-

**THE TABLE.**

| **Serial Number (1)** | **Wards Committee (2)** | **Ward Numbers Comprising the Wards Committee (3)** |
|---|---|---|
| (1) | Wards Committee – North | 1 to 4, 26 to 31, 38 to 44, 46, 47 and 55 |
| (2) | Wards Committee – East | 32 to 37, 56 to 67, 69 and 75 |
| (3) | Wards Committee – South | 76 to 79 and 85 to 100 |
| (4) | Wards Committee- West | 5 to 24 |
| (5) | Wards Committee – Central | 25, 45, 48 to 54, 68, 70 to 74 and 80 to 84 |

## NOTIFICATION-II.

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) read with section 8 of the Tiruppur City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 7 of 2008), the Governor of Tamil Nadu hereby constitutes four wards committees for the Corporation of Tiruppur and each of the said wards committee specified in column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof :-

**THE TABLE.**

| **Serial Number (1)** | **Wards Committee (2)** | **Ward Numbers Comprising the Wards Committee (3)** |
|---|---|---|
| (1) | Wards Committee – I | 1 to 15 |
| (2) | Wards Committee – II | 16 to 30 |
| (3) | Wards Committee – III | 31 to 45 |
| (4) | Wards Committee- IV | 46 to 60 |

**NOTIFICATION-III.**

In exercise of the powers conferred by sub-section (1) of section 5-A of the Coimbatore City Municipal Corporation Act, 1981 (Tamil Nadu Act 25 of 1981) read with section 8 of the Vellore City Municipal Corporation Act, 2008 (Tamil Nadu Act 26 of 2008), the Governor of Tamil Nadu hereby constitutes four wards committees for the Corporation of Vellore and each of the said wards committee specified in column (2) of the Table below shall comprise the wards specified in the corresponding entry in column (3) thereof :-

**THE TABLE.**

| Serial Number (1) | Wards Committee (2) | Ward Numbers Comprising the Wards Committee (3) |
|---|---|---|
| (1) | Wards Committee – I | 1 to 15 |
| (2) | Wards Committee – II | 16 to 30 |
| (3) | Wards Committee – III | 31 to 45 |
| (4) | Wards Committee- IV | 46 to 60 |

**N.S.PALANIAPPAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT. (i/c)**

//True Copy//

Section Officer